சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

புசா. 01 திரு. விக்ரம் சிங் த /பெ திரு. பிரகளாத் சிங் , வயது .36

## எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை .-

01. எனக்கு தமிழில் எழுத படிக்க தெரியுமா என்றால் படிக்க தெரியும் எழுத தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள சத்யபிரமான வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து பார்த்தேன் என்றால் சரிதான் அது உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எதிரி என் கடையில் இரண்டு மூன்று வருடங்கள் வேலை செய்து வந்தார். நான் எம் ஏ எம் எல் படித்துள்ளேன். எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக கூறியுள்ள நிலையில் வங்கியில் இருந்து பணம் எடுத்து கொடுத்தேனா என்றால் இல்லை ரொக்கமாக கொடுத்தேன். ரூபாய் 10 ஆயிரத்துக்கு மேல் பணம் கொடுக்க வேண்டும் என்றால் வங்கி பரிவர்த்தனை மூலமாக செய்ய வேண்டும் என்றாலும் ரொக்கமாக கொடுக்க கூடாது என்றாலும் சரிதான். நான் என் வீட்டிற்கு தெரியாமல் தனிப்பட்ட முறையில் கொடுத்ததால் ரொக்கமாக கொடுத்தேன். அவ்வாறு என் வீட்டிற்கு தெரியாமல் எதிரிக்கு பணம் கொடுத்ததாக எனது புகாரிலும் சட்ட அறிவிப்பிலும் முதல் விசாரணையிலும் தெரிவிக்கவில்லை என்றால் சரிதான்.

**குறுக்குவிசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

//**உண்மை நகல்** //

KODHAVADI SUBRAMANIAN DINESH

Digitally signed by KODHAVADI SUBRAMANIAN DINESH
Location: Judicial Magistrate No.1 Thirupattur

**நீத்துறை நடுவர் எண்**. 01
**திருப்பத்தூர்**